JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw- 4 Witness
for Prosecution

| CC.No. | 220/2025 | Crime No. | | Station | |
|---|---|---|---|---|---|

| Name | Pw.4 வெங்கடேஷ் | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 17.03.2026 | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் சித்தாரில் குடியிருந்து கொண்டு, கட்டிட வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. ஒருநாள் காலையில் நான் இந்திரா நகர் வீரமாத்தி அம்மன் கோவில் அருகில் இருந்த பொழுது, அங்கு வந்த போலீசார் முன்தினம் நடைபெற்ற சாலை விபத்து தொடர்பாக விசாரித்து படம் வரைந்து கொண்டிருந்தார்கள். என்னிடம் சாட்சி கையொப்பம் போடும்படி கேட்டுக் கொண்டதால், நான் பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்கிற விவரம் எனக்குத் தெரியாது என்றால், சரிதான். போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்தேன் என்றால், சரிதான்.

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.17 18:57:55 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani

JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw- 5 Witness
for Prosecution

| CC.No. | 220/2025 | Crime No. | | Station | |
|---|---|---|---|---|---|

| Name | Pw.5 திரு ஜெயராமன் | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 17.03.2026 | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது அம்மாபேட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவியாளர் ஆக பணிபுரிந்து வருகிறேன் கடந்த 11.10.2024-ம் தேதியன்று இரவு நிலைய தலைமை காவலர் கோபாலகிருஷ்ணன் என்பவர் நிலைய அலுவலில் இருந்த பொழுது, ஈரோடு சுதா மருத்துவமனையில் இருந்து வரப்பட்ட அண்ணாமலை என்பவரது RTA இன்டிமேஷனைப் பெற்று மேற்படி மருத்துவமனைக்கு சென்று விசாரித்த போது காயமடைந்த அண்ணாமலை என்பவர் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சையில் இருந்ததால் அவருடன் இருந்த அவரது மனைவி சித்ரா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து நிலைய குற்ற எண்.423/2024, சட்டப்பிரிவுகள் 281, 125(a) BNS கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பை பெற்ற நான் மறுநாள் 12.10.2024-ம் தேதியன்று காலை06.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஆறுமுகம் மற்றும் வெங்கடேஷ் ஆகியவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜரும், மாதிரி வரைபடமும் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் சித்ரா, கந்தன், முருகேசன், ஆறுமுகம், வெங்கடேஷ் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில் எதிரி கடந்த 15.10.2024 ஆம் தேதியன்று நிலையம் ஆஜராகி குற்றத்தை ஒப்புக்கொண்ட எதிரி அன்பழகன் என்பவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்தும், தக்க நிலைய பிணையில் விடுவித்தேன். அவர் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின்

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.17 18:58:04 +0530

ஆவணங்களை பெற்று மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்தேன். சேலம் அரசு மருத்துவமனையில், சிகிச்சையில் இருந்த, விபத்தில் காயம் பட்ட அண்ணாமலை என்பவர் சிகிச்சை பலனின்றி கடந்த 12.10.2024–ம் தேதியன்று பகல் 12:30 மணிக்கு இறந்து விட்டதாக கிடைத்த இறப்பு இன்டிமேஷனை பெற்று வழக்கின் சட்ட பிரிவை 281, 125(a) BNS இருந்து சட்டப்பிரிவுகள் 281, 106(1) BNS ஆக மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் தொடர் புலன் விசாரணைக்காக வழக்குக் கோப்பை நிலைய ஆய்வாளர்கள் அவர்களிடம் ஒப்புவித்தேன். புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், நான் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் வழக்கத்திற்காக காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால், சரியல்ல.

Signature of Witness

Taken down before me in open court

readover to the witness in the presence

of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.17 18:58:18 +0530

Sd/– (J.RAJKUMAR)

**Judicial Magistrate No.1, Bhavani**

JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw- 6 Witness
for Prosecution

| CC.No. | 220/2025 | Crime No. | | Station | |
|---|---|---|---|---|---|

| Name | **PW.6 திரு ஜெயமுருகன்** | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 17.03.2026 | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு காவல்துறையில் துணை காவல் கண்காணிப்பாளராக பணியாற்றி, பணி ஓய்வு பெற்று தற்போது தூத்துக்குடி மாவட்டத்தில் வசித்து வருகிறேன். நான் அம்மாபேட்டை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த பொழுது கடந்த 11.10.2024 ஆம் தேதியன்று நிலைய தலைமை காவலர் கோபாலகிருஷ்ணன் என்பவர் நிலைய குற்ற எண்.423/2024, சட்டப்பிரிவுகள் 281, 125(a) BNS கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் ஜெயராமன் என்பவர் முதல் கட்ட புலன் விசாரணை மேற்கொண்டு வழக்கின் சட்ட பிரிவை 281, 125(a) BNS இருந்து சட்ட பிரிவுகள் 281, 106(1) BNS ஆக மாறுதல் செய்து தொடர் புலன் விசாரணைக்காக என்னிடம் ஒப்புவித்த வழக்குக் கோப்பை பெற்ற நான் சம்பவ இடம் சென்று பார்வையிட்ட பொழுது சம்பவ இடம் மாதிரி வரைபடத்துடன் ஒத்திருந்ததால் புதிதாக எதுவும் தயார் செய்யவில்லை. சாட்சிகளை விசாரித்த போது அவர்கள் சிறப்பு உதவி ஆய்வாளரிடம் கூறியதையே என்னிடமும் கூறியதால், புதியதாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை.

பின்னர் 03.12.2024–ம் தேதியன்று காலையில் சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு தவக்கிடங்கில் இருந்த இந்த விபத்தில் இறந்து போன அண்ணாமலை என்பவரது பிரேதத்தை பஞ்சாயத்து தாரர்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **பிரதவிசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் இறப்பின் மருத்துவ ரீதியான காரணத்தை அறியும் பொறுத்து பிரேதத்தை நிலைய காவலர் ராஜகுரு என்பவர் மூலம் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் பிரத விசாரணை சாட்சிகளான சந்திரசேகரன், அண்ணாதுரை, சின்னப்பன், மூர்த்தி, அர்ஜூனன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 04.12.2024 ஆம் தேதியன்று மோட்டார் வாகன ஆய்வாளர்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.17 18:58:25 +0530

குணசேகரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றேன். TN 36 BS 5013 என்ற பதிவு எண் கொண்ட இ–பைக்கின் **மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் விபத்தில் காயம் பட்ட அண்ணாமலை என்பவருக்கு விபத்து பதிவேடு செய்து முதலுதவி சிகிச்சை அளித்த சுதா மருத்துவமனை மருத்துவர் சக்தி சரவணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு பெற்றேன். **விபத்து பதிவேடு அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் சேலம் அரசு மருத்துவமனையில் காயம் பட்ட அண்ணாமலை என்பவருக்கு சிகிச்சை அளித்து அவரது இறப்பை உறுதி செய்த மருத்துவர் பொன்னையன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் கோகுல் ராம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேதப் பரிசோதனை அறிக்கை பெற்றேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் பிரேத பரிசோதனை செய்ய உதவிய காவலர் ராஜகுரு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். முதற்கட்ட புலன் விசாரணை மேற்கொண்ட சிறப்பு உதவி ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து கடந்த 04.12.2024 ஆம் தேதியன்று எதிரி மீது சட்ட பிரிவுகள் 281, 106(1) BNS கீழ் இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், நான் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் வழக்கத்திற்காக காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால், சரியல்ல. ஆஜர் எதிரி என் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றால், சரியல்ல. நான் முறையாக புலன் விசாரணை செய்யாமல் இந்த குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. எனது விசாரணையின் போது அ.சா.1 ன் பின்னால் வந்த ஸ்கூட்டி வாகனம் தோள்பட்டையில் இடித்ததாக எதுவும் கூறவில்லை என்றால், சரிதான்.

Signature of Witness

Taken down before me in open court

readover to the witness in the presence

of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.17 18:58:45 +0530

Sd/– (J.RAJKUMAR)

**Judicial Magistrate No.1, Bhavani**